# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No.09/2025

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 01-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | டெக்னீசியன் |
| பெயர் | - | புவியரசன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | அன்பழகன் | சமயம் | - | |
| கிராமம் | - | வாழைத்தோட்டம் | வயது | - | 40/2025 |
| சாதி | - | | | | |

**<u>24-11-2025</u>**

**(2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 1-ம் எதிரி ஆஜரில்லை)**

(1-ம் எதிரி தரப்பில் பிரிவு355 BNSS-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணையின் தொடர்ச்சி</u>:**

1. தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 2 மற்றும் 3-ம் எதிரிகள் மற்றும் இன்னொரு நபரை ஷேக்கல்முடி காவல் நிலையத்தின் முன்பு பார்த்தேன். மற்றொரு எதிரியை பார்த்தால் அடையாளம் சொல்ல இயலும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(1-ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரிலிருந்து, 1-ம் எதிரியின் அடையாளம் குறித்து தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என தெரிவித்தார்.)

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. வழக்கு சொத்துக்களை எதிரிகள் தான் திருடினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். காவல் துறையினர் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து மெயின் ரோட்டிற்கு வர வேண்டும் என்றால் சஜிதா காட்டேஜ் ஒட்டி வரும் ரோட்டில் தான் வர வேண்டும் என்றால் இல்லை. சஜிதா காட்டேஜிற்கு பின்புறம் ஒரு தடம் உள்ளது. அதன் வழி நடந்து வரலாம். சம்பவயிடமான டவர்உள்ள இடம் யாருக்கு சொந்தமானது

என்றால் சஜிதா காட்டேஜிற்கு சொந்தமான இடமாகும். டவர் இருக்கும் ஏரியாவில் கேமிரா உள்ளதா என்றால் கேமிரா இல்லை. டவர் உள்ள இடத்திலிருந்து சஜிதா காட்டேஜ் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 350 மீட்டம் துாரம் இருக்கும். சஜிதா காட்டேஜில் இருந்து பார்த்தால் டவர் தெரியும். டவருக்கு கீழ் குடியிருப்புகள் உள்ளது என்றால் இல்லை. சஜிதா காட்டேஜ் ஒட்டி குடியிருப்புகள் உள்ளது. எஸ்டேட்டிற்கு வாட்ச்மேன் இருக்கிறார் என்றால் இருக்கிறார். சஜிதா காட்டேஜில் 9 CCTV கேமிரா உள்ளது என்றால் சரிதான். அதில் 2 கேமிரா சஜிதா காட்டேஜ்க்கு சொந்தமான எஸ்டேட்டை பார்ப்பதற்கான டவர் இருக்கும் பகுதியை நோக்கி வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பகுதியில் ஆள் நடமாட்டம் இருந்திருந்தால் அந்த கேமிராவில் பதிவாகியிருக்கும். அங்கு இருப்பவர்களுக்கு தெரிந்திருக்கும் என்றால் சரிதான். தனியார் டெலிகம்யூனிகேசன் நிறுவனத்தில் நான் பொறுப்பில் இருக்கிறேன் என்பதற்கான அடையாள அட்டையை போலீசார் விசாரணையில் நான் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கள் போன்று வெளிச்சந்தையில் வாங்கக்கூடியவை என்றால் இல்லை. நாங்களே தயாரிப்பு செய்கிறோமா என்றால் இல்லை. கம்பெனியில் ஆடர் கொடுத்து வாங்குவதாகும். அந்த வயரில் Jio என்று அடையாளம் இருக்குமா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லப்படும் டவரில் இருந்த இருப்பு வயர்களுக்கான பதிவேடு உள்ளதா என்றால் கம்பெனியில் தான் இருக்கும் எங்களிடம் இருக்காது. அந்த இடத்தில் வயர்கள் இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் போலீசார் விசாரணையில் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்களின் நுணுக்கங்களை பற்றியும், அதன் பயன்பாடுகளை பற்றியும் எதிரிகளுக்கு எதுவும் தெரியாது. அதை நன்கு தெரிந்த எங்களை சார்ந்தவர்கள் தான் அதனை வெட்டி எடுத்து இருக்கிறார்கள் என்றாலும் எதிரிகள் மீது தவறாக புகார் கொடுத்திருக்கிறேன் என்றாலும் சரியல்ல. புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சாம்பல் நிற காப்பர் கம்பிகள் காணாமல் போனதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த யூனிட்டில் எவ்வளவு வயர்கள் இருந்தது என்பதற்கான இருப்பு பதிவேடு பராமரிப்பு செய்து வருகிறோமா என்றால் கம்பெனியில் இருக்கும் என்னிடம் இல்லை. உடைந்ததாக சொல்லப்படும் பூட்டு சம்பவயிடத்தில் இருந்ததா என்றால் ஆமாம். சம்பவயிடத்திற்கு நான் எப்போது சென்றேன் என்றால் அடுத்த நாள் காலை 07.00 மணிக்கு போனேன். சம்பவநாளன்று நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவநாளன்று இரவே ஓடோபோன் 2G டவுன் ஆகிவிட்டது என்று எனது செல்போனிற்கு குறுஞ்செய்தி வந்துவிட்டது என்றால் சரிதான். எனக்கு குறுஞ்செய்தி கிடைத்தவுடன் நான் மேனேஜருக்கு தகவல் சொல்லவில்லை என்றால் அவர்கள் தான் எனக்கு தகவல் சொன்னார்கள். உண்மையிலேயே நான் சொன்ன நேரத்தில் வழக்கு சொத்து காணாமல் போயிருந்தால் அன்று இரவே புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்துக்களில் சாம்பல் நிற வயர் உள்ளது என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u> :

1. நான் டெலிகம்யூனிகேசன் நிறுவனம் எனக்கு கொடுத்த அடையாள அட்டையை நான் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் ஆமாம்.

**<u>மறு குறுக்கு விசாரணை</u>**

வழக்கறிஞர் ஆஜரில் இருந்து மறு குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.